# அஷ்ரப் பெற்றுக்கொடுத்த அரசியல் முகவரியும், அந்தஸ்தும் கொஞ்சம் கொஞ்சமாய் பறிபோகும் நிலையை தடுக்கவேண்டும்

## - கிழக்கு மாகாண உறுப்பினர் மசூர் சின்னலெப்பை

மருதமுனை,

முஸ்லிம் சமுதாயத்துக்கு பெருந்தலைவர் அஷ்ரப் பெற்றுக் கொடுத்த அரசியல் முகவரியும், அந்தஸ்தும் கொஞ்சம் கொஞ்சமாகப் பறிபோய்க் கொண்டிருக்கும் நிலையைத் தடுத்து நிறுத்துவதே அவருக்கு அல்லது அவருக்காக நாம் செய்யக் கூடிய மிகப் பெரும் நன்றிக்கடனும் கைங்கரியமுமாகும் என்று கிழக்கு மாகாண சபையின் மு. கா. உறுப்பினர் மசூர் சின்ன லெப்பை தெரிவித்தார்.

மு. காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பின் 61 ஆவது பிறந்த தினம் நேற்றைய தினம் 23 ஆம் திகதியாகும். இதனை நினைவு கூர்ந்து மாகாண சபை உறுப்பினர் மசூர் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

முஸ்லிம் சமூகத்துக்காக அஷ்ரப் பெற்றுக் கொடுத்த அரசியல் அடையாளமும், உரிமைகளும் இன்று கொஞ்சம் கொஞ்சமாக பறிபோய்க் கொண்டிருக்கின்றது. பேரினவாதம் ஒரு புறம் முஸ்லிம்களின் அடையாளங்களைக் களவாடிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் பேரினவாதத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட சில சிறுபான்மைக் கரங்களும் அந்த வேலையினைச் செய்து கொண்டிருக்கின்றன.

அஷ்ரப் நடத்திய அரசியல் போராட்டத்தை இன்று நமது சமூகத்துக்குள் இருக்கின்ற சில முகங்களே கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இணங்கிப் போதல் என்பதற்கும், சரணடைதல் என்பதற்கும் அர்த்தங்கள் தெரியாமல் இன்று நமது அரசியல்வாதிகள் சிலர் தடுமாறிக் கொண்டிருக்கின்றார்கள்.

வெறும் வார்த்தையால் மட்டும் அஷ்ரப்பை நினைவுபடுத்திக் கொள்வதில் எதுவிதமான அர்த்தங்களும் இல்லை. அதனால் அஷ்ரப் மற்றும் முஸ்லிம் சமூகத்துக்கோ எதுவித நன்மைகளும் ஏற்பட்டு விடப் போவதுமில்லை.

அஷ்ரப் அவர்கள் உயிரைக் கொடுத்து உருவாக்கிய அரசியல் ஒற்றுமை என்பது இன்று அவரின் சிஷ்யர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு கூட்டத்தாரால் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சந்திக்கு ஒரு அரசியல் கட்சியும், தலைவரும் உருவாகி வரும் இன்றைய அபாயகரமான அரசியல் நிலையானது அஷ்ரப் ஆத்மாவையோ அல்லது அவரின் நேசர்களையோ ஒருபோதும் சந்தோஷப்படுத்தி விடப் போவதில்லை.

சுய அடையாளங்களை மறந்து பெருந்தேசிய கட்சிகளோடு சங்கமித்திருந்த முஸ்லிம் சமுதாயத்தை - பிரித்தெடுத்து அந்த சமுதாயத்தின் நெற்றியில் அதன் அடையாளத்தையும் முகவரியினையும் எழுதி விட்டுப் போன மிகப் பெரும் அரசியல் ஞானி அஷ்ரப் ஆவார்.

ஆனால், முஸ்லிம் சமூகத்தை இன்று மீண்டும் பெருந்தேசியக் கட்சிகளோடு அந்த சமூகத்தைச் சேர்ந்த சிலரே ஒன்று சேர்த்து விடத் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதேவேளை, தாங்கள் அஷ்ரப்பின் வழி நடப்பவர்களாகவும் சொல்லிக் கொள்கிறார்கள். இது மாமிசம் சாப்பிடும் ஒருவன். தன்னை - தாவர போஷிணி என்று சொல்லிக் கொள்வதைப் போல் மிகவும் கோமாளித்தனமான அல்லது அறிவற்றதொரு கூற்றாகும்.

அஷ்ரப் இந்த சமூகத்துக்கான அரசியல் போராட்டத்தில் தன் உயிரையே அர்ப்பணித்துக் கொண்ட மாமனிதர். அவரின் அன்பினைப் போலவே, கோபங்களும் முஸ்லிம் சமூகத்துக்கு நல்லவைகளையே பெற்றுத் தந்தன. அவர் முஸ்லிம் சமூகத்தின் நன்மைகளுக்காக அனைத்தையும் விட்டுக் கொடுத்தார். ஆனால், முஸ்லிம் சமூகத்தின் நலனை எதற்காகவும் அவர் விட்டுக்கொடுக்கவேயில்லை.

பெருந்தலைவரின் இந்தப் போக்கைத்தான் எமது முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் தமக்கான பாடமாக வைத்துக் கொள்ள வேண்டும். பட்டங்களுக்காகவோ பதவிகளுக்காகவோ முஸ்லிம் சமுதாயத்தின் நலனை விட்டுக் கொடுக்கின்ற அல்லது காவு கொடுக்கின்ற அரசியலை ஒருபோதும் செய்து விடக் கூடாது. அப்படிச் செய்பவர்களின் பரம்பரையைக் கூட இந்த சமூகம் மன்னிக்காது. பெருந்தலைவர் அஷ்ரப்பிற்கு மகத்தான மறுமை வாழ்வும், மாபெரும் சுவர்க்கமும் கிடைக்க - அவரின் பிறந்த நாளை முன்னிட்டு இருகரமேந்திப் பிரார்த்திப்போம்.




# அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து செயற்பட்டால் சமூக மாற்றம் ஏற்படும்

## - சகவாழ்வு மன்ற பிரதிநிதி லக்ஷ்மன்

காரைதீவு,

''அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து மக்கள் சேவையாற்றும் போது சமூக மாற்றம் தானாக ஏற்படும். இம்மாற்றம் வெறுமனே அரசியலிலும் பொருளாதாரத்திலும் மட்டும் ஏற்பட்டு விடாது. மாறாக கலாசார விழுமியங்களிலும் மாற்றம் ஏற்பட வேண்டும்.''

இவ்வாறு சகவாழ்வு மன்ற தலைமையக பிரதிநிதி லக்ஷ்மன், காரைதீவுப் பிரதேச கருத்தறி செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

காரைதீவுப் பிரதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பயனாளிகள் உள்ளிட்டோருக்கான இக் கருத்தறி மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை காரைதீவு பிரதேச செயலக மேல்தளத்தில் இணைப்பாளர் கு. ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது.

அங்கு சிரேஷ்ட எழுத்தாளரும், ஊடகவியலாளருமான ஜோய் செனவிரத்ன, உதவிப் பிரதேச செயலர் சிவ. ஜெகராஜன், நுவரெலியா மொழி பெயர்ப்பாசிரியர் ரி. மகேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரச சார்பற்ற நிறுவனம் என்ற பதம் ஒரு சாராரிடையே ஒருவித அலர்ஜியை ஏற்படுத்துகிறது. இத்தனைக்கும் இந்நிறுவனங்கள் ஆற்றிய பணிகளை, சேவைகளை பேசுவது மில்லை; பாராட்டுவதுமில்லை.

1950 களின் பின்பு ஐரோப்பியரின் கலாசாரம், அரசியல், அபிவிருத்தியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இது சமூக மாற்றங்களாக கருதப்பட்டன.

தனியே அரசோ அல்லது அரச சார்பற்ற நிறுவனமோ சமூக மாற்றத்தை தனியே செய்து விட முடியாது.

சிவில் சமூகங்களோடு இந்நிறுவனங்கள் இணைந்து பணியாற்றுகையில் சமூக மாற்றம் தானாக ஏற்படும்.

அரச சார்பற்ற நிறுவனங்களை குறை சொல்வது ஒரு சாராரின் தொடர் செயற்பாடாக உள்ளது. சில சந்தர்ப்பங்களில் இவர்களது பணி குறைத்து மதிப்பிடப்படுகிறது.

கடந்த 30 வருட காலங்களில் இலங்கையில் இந்நிறுவனங்களின் பணிகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து பல தகவல்களைப் பெற முடியும் என்றார்.

காரைதீவுப் பிரதேசம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆற்றிய பணிகள் தொடர்பாக குழுச் செயற்பாடுகள் இடம்பெற்று அறிக்கைபடுத்தப்பட்டன.

பொதுவாக வடிகான் பிரச்சினை, சூழல் மாசடைதல், அடிப்படை வசதிகள் போதாமை, மது பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், பாடசாலை இடைவிலகல், அரசியல் தலையீடு என்பவற்றைச் சுட்டிக்காட்டினர்.

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டிணைப்பாளர் இர்பானும் கலந்துகொண்டு கருத்துக்களைப் பரிமாறினார்.





மட்டக்களப்பு கல்லடியிலுள்ள பேச்சியம்மன் இந்து ஆலயத்தின் மூலஸ்தானத்தின் பின்னாலுள்ள தேத்தா மரத்தடியில் அம்பாள் தோன்றிய காட்சியினை பெருந்திரளான மக்கள் வியாழக்கிழமை தொடக்கம் பார்வையிட்டு வருவதையும், அவ் ஆலயத்தையும் மேற்படி படத்தில் காணலாம்.

(படம் காங்கேயனோடை நிருபர்)

# உயர் கல்வி அமைச்சருடன் பேசி நல்ல தீர்வை பெற்றுத் தருவேன்

## -கிழக்கு பல்கலைக்கழகத்தில் கனகசபை எம்.பி. உறுதி

(நமது நிருபர்)

முகாமைத்துவப் பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்ட சிங்கள மாணவர்களும் தமிழ் மாணவர்களும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒன்றாக கல்வி பயில வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானதும் வரவேற்கக்கூடியது மாகும். நான் கொழும்பு சென்றதும் உடனடியாக உயர் கல்வி அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணையகத்தின் தலைவரையும் சந்தித்து உங்கள் கோரிக்கையை வலியுறுத்தி நல்ல தீர்வு கிடைக்கச் செய்வேன் என்று கடந்த திங்கட்கிழமை கிழக்கு பல்கலைக்கழகத்தில் உபவேந்தர், பதிவாளர் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் ஏனைய மாணவர் தலைவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த. கனகசபை குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில்,

கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் புத்தலவுக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை எனத் தெரிவித்தார்.

ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், எமது கட்சித் தலைவர் உட்பட அனைவருடைய ஒத்துழைப்பும் ஒத்தாசையும் இவ்விடயத்தில் பெறப்படுமெனக் குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து உபவேந்தர் என். பத்மாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டார்.

கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முகாமைத்துவப் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட சிங்கள மாணவர்கள் சடுதியாக புத்தல பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டனர். அதனைக் கண்டித்தும் இடமாற்றத்தை நிறுத்தும் படியும் பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதும் தெரிந்ததே.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

காங்கேயனோடை,

தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தனது பாராளுமன்ற நிதியிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கென 44 இலட்சத்து 55,911 ரூபா பணத்தினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

34 திட்டங்களுக்காக இப்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மண்முனை வடக்கு, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, ஏறாவூர்பற்று, கிரான், வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாடசாலை, கல்வி, வணக்கஸ்தலங்கள் புனரமைப்பு, இந்து ஆலயங்களுக்கான ஒலி பெருக்கி வசதி, சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுக்கான உதவிகள் போன்ற அபிவிருத்தி வேலைகள் இதன் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேநேரம், தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற நிதியிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

40 திட்டங்களுக்காக இப்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதில் ஐந்து திட்டங்கள் இதுவரை நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் 3 இலட்சத்து 22,715 ரூபா செலவுசெய்யப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் மற்றொரு அதிசயம்

மண்டூர்,

மட்டக்களப்பிலுள்ள மற்றும் ஒரு அம்பாள் ஆலயத்தில் மேலும் ஒரு அதிசயம் இடம்பெறுகின்றது. மட்டக்களப்பில் நிலவும் வரலாறு காணாத வரட்சியும் ஆலயங்களில் நடைபெறும் அதிசய சம்பவங்களும் மற்றுமொரு இயற்கை அழிவின் எதிர்வு கூறலாகும் என மக்கள் சந்தேகிக்கின்றனர்.

மட்டக்களப்பு, கல்லடி- உப்போடை பேச்சியம்பாள் ஆலய மூலஸ்தானத்தின் பின்புறமாகவுள்ள தேத்தா மரத்தில் பேச்சியம்பாளின் உருவம் தென்படுவதாகவும் அந்த தெய்வீகக் காட்சியைக் காண மக்கள் வெள்ளம் அங்கு திரண்ட வண்ணமும் உள்ளது.

அம்பாளின் அருட்காட்சியைக் காணும் ஒவ்வொருவரின் கண்களுக்கும் வெவ்வேறு வடிவத்தில் அம்பாள் காட்சி கொடுப்பதாகவும் அறியக் கிடக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி- உப்போடை பேச்சியம்பாள் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயம் என்பதும் அங்கு அற்புதங்கள் நிகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

வந்தாறுமூலை கண்ணகி அம்பாள் ஆலயத்தினுள் சிலம்பு ஒலி கடந்த சில வாரங்களில் கேட்டமை வாசகர் அறிந்ததே.

# அம்பாறை மாவட்ட மணிக்கூட்டு கோபுரங்கள் எப்போது திருத்தப்படும்

## - பொதுமக்கள் கேள்வி

காரைதீவு,

அம்பாறை மாவட்டத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களிலொன்றிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் அண்மையில் பிரபல நிறுவனமொன்றினால் புதிய டிஜிற்றல் முறை கடிகாரம் பொருத்தப்பட்ட போதிலும் நேரம் சரியாகக் காட்டப்படவில்லை என்று மக்கள் விசனப்படுகின்றனர்.

ஏலவே பொருத்தப்பட்டிருந்த கடிகாரங்கள் பல வருடகாலமாக செயலிழந்து ஒரேயொரு நேரத்தையே காட்டிக் கொண்டிருந்தன. இந்நிலைமை நாட்டின் பல பாகங்களுக்கும் பொருந்தும் என்பது தெரிந்ததே.

அண்மையில் புதிதாக அவற்றுக்குப் பதிலாக நவீன டிஜிற்றல் முறையில் பிரபல நிறுவனமொன்று அழகிய டிஜிற்றல் நேரங் காட்டியைப் பொருத்தியது. உண்மையில் அவை அழகாகவும், பச்சை ஒளியில் துல்லியமாகவும் சரியான நேரத்தைக் காட்டி வந்ததில் மக்கள் சந்தோஷப்பட்டனர். கடந்த சில நாட்களாக சம்மாந்துறை போன்ற சில நகரங்களிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் நேரம் தவறாக காணப்படுவதால் வீதிப் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர். அத்துடன் எப்போ மணிக்கூடுகள் திருத்தப்படும் என கேள்வி எழுப்புகின்றனர்.

# சர்வதேச சிறுவர், முதியோர் தினமும் பரிசளிப்பு வைபவமும்

துறைநீலாவணை,

கிழக்கு மாகாண சபையுடன் இணைந்து கிழக்கு மாகாண சமூக நலத்துறை திணைக்களமும் சமூக நலத்துறை அமைச்சும் நடத்தவுள்ள சர்வதேச சிறுவர் தினம், முதியோர் தினம், பரிசளிப்பு வைபவம் என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாகவும் கிழக்கு மாகாண சபை அமைச்சர்களான விமலவீர திசாநாயக்க, ரி. நவரெத்தினராசா, எம். உதுமா லெப்பை ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான சோ. புஸ்பராசா, கே.எம்.ஏ. ரஸ்ஸாக் (ஜவாத்), ஏ.எம். ஜெமீல், எம்.எல்.ஏ. அமீர், ரி.ஏ.கே. தேவபெரும, எஸ். செல்வராசா, எல்.எல்.ரி. நயீம், அப்துல் மஜீத், டீ.டீ.கே. கமகே, எம். சின்னலெப்பை, ஏ.பி.சீ. கலபதி ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# தமிழ்த் தினப் போட்டியில் மட்டு கல்வி வலயம் முதலாமிடம்

காங்கேயனோடை,

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியில் மட்டக்களப்பு கல்வி வலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.இப்போட்டியில் இரண்டாமிடத்தை பட்டிருப்பு கல்வி வலயமும் மூன்றாமிடத்தை கல்குடா கல்வி வலயமும் நான்காம் இடத்தினை மட்டக்களப்பு மத்திய கல்வி வலயமும் பெற்றுள்ளன.

ஐந்து பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியில் மட்டக்களப்பு கல்வி வலயத்தைச் சேர்ந்த 26 மாணவர்கள் முதலாமிடத்தினையும் 11 மாணவர்கள் இரண்டாமிடத்தினையும் 5 மாணவர்கள் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

பட்டிருப்பு கல்வி வலயத்தைச் சேர்ந்த 14 மாணவர்கள் முதலிடத்தையும் 19 மாணவர்கள் இரண்டாவது இடத்தினையும் 8 மாணவர்கள் மூன்றாமிடத்தினையும் பெற்றுள்ளதுடன் கல்குடா கல்வி வலயத்தைச் சேர்ந்த 5 மாணவர்கள் முதலாமிடத்தினையும் 10 மாணவர்கள் இரண்டாவது இடத்தினையும் 23 மாணவர்கள் மூன்றாவது இடத்தினையும் பெற்றுள்ளனர்.மட்டக்களப்பு மத்தி வலயத்தைச் சேர்ந்த 3 மாணவர்கள் முதலிடத்தினையும் 9 மாணவர்கள் இரண்டாமிடத்தையும் 8 மாணவர்கள் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.இப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா, மட்டக்களப்பு மத்தி ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றினர்.

# கிண்ணியாவில் பொது பஸ் நிலையம் அமைக்க கோரிக்கை

(திருகோணமலை மேலதிக நிருபர்)

கிண்ணியாவில் பொது பஸ் நிலையம் ஒன்று இல்லாததனால் பயணிகள் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.கடந்த 20 ஆம் திகதி கிண்ணியா பாலம் திறந்து வைக்கப்பட்டதையடுத்து முன்னர் துறை கடந்து, திருகோணமலைக்கு சென்றவர்கள் தற்பொழுது இங்கிருந்து செல்லக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் திருகோணமலைக்குச் செல்லக் கூடிய அனைத்து பஸ்களும் கிண்ணியாவுக்குள் வருவதினால் அவற்றை நிறுத்தி வைக்கக் கூடிய பொது பஸ் நிலையம் ஒன்று இல்லாததனால் வீதிகளிலேயே பஸ்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

# வீட்டுக்கு தீ வைக்க முயன்றவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை

(அக்கரைப்பற்று மேலதிக நிருபர்)

அட்டாளைச்சேனை, பாலமுனை பிரதேசத்தில் வீடொன்றை தீ இட்டுக் கொளுத்த எத்தனித்த நபர் ஒருவரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் விசாரணையின் பின் கடந்த புதன்கிழமை அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிவான் ஜே. கஜநிதிபாலன் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத சிறைத்தண்டனைக்கு உத்தரவிட்டதுடன் அபராதமாக ரூபா ஐந்நூறு செலுத்துமாறும் உத்தரவிட்டார்.





மட்டக்களப்பு மண்டபத்திலுள்ள அ.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் வழங்கல் திட்டத்தினையும் பாடசாலை சுற்றுமதிலையும் திறந்து வைத்த போது மட்டக்களப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.இ.போல், வவுணதீவு பிரதேச சபையின் தலைவர் சுப்பிரமணியம் உட்பட அதிதிகள் அதன் நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்துவதைப்பதையும், அப்பாடசாலை மாணவர்கள் பான்ட்வாத்தியம் இசைத்து அதிதிகளை அழைத்துவருவதையும் படங்களில் காணலாம்.

(படம்:- காங்கேயனோடை நிருபர்)